## இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபை - 2011

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கை சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.க.நி)

(அ) இ.க.நி. 16 — சேவைக் காலம் ஒரு வருடம் பூர்த்தியான ஊழியர்களுக்கான பணிக்கொடை ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை

(ஆ) இ.க.நி. 24

(i) அரசாங்க மானியங்கள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை, மூலதன பாய்ச்சலா, வருமானப் பாய்ச்சலா மற்றும் நிலையான சொத்துக்கள் தொடர்பான மானியத்திற்காக எவ்விதக் கொள்கை பின்பற்றப்பட்டது என்பது குறித்து கணக்குடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டின் போதும் 2011 ஆம் ஆண்டின் போதும் கையேற்கப்பட்ட ரூபா 13,498,416 பெறுமதியான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ஏற்பாடாக ரூபா 1,342,737 தொகையும் 2011 ஆம் ஆண்டின் போது திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 10,728,295 பெறுமதியான மோட்டார் வாகனங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடாக ரூபா 1,463,574 தொகையும் ஆண்டிற்கான வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் காரியாலய மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,529,024 தொகைக்காக 05 மாத காலத்திற்கான பெறுமானத்தேய்வு ரூபா 31,855 ஆன போதிலும் இதற்காக ரூபா 76,451 தொகை பெறுமானத்தேய்வாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்காக 2010 திசெம்பர் மாதத்தின் போது கிடைக்கப்பெற்ற மீண்டெழும் மற்றும் மூலதன மானியம் முறையே ரூபா 850,000 ஆகவும் ரூபா 2,900,000 ஆகவும் 2011 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற மானியமாகக் கருதப்பட்டு கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 850,000 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) போட்டி உடன்படிக்கை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களில் ரூபா 833,541 தொகை 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(ஆ) வெளிநாட்டுப் பாடநெறிகள் பூர்த்தியாக்கப்படாத 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,986,355 தொகை மீளாய்வாண்டின் இறுதியிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 இணக்கம் செய்யப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளின் மீதி ரூபா 3,651,977 ஆன போதிலும் சபையினால் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் இது ரூபா 3,028,332 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|---|
| (அ) | I | நி.பி. 104(3),(4) | 2011 ஒக்டோபர் 16 ஆம் திகதி சபையின் வாகனம் விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பாக ஆரம்ப அறிக்கையும் முழுமையான அறிக்கையும் அமைச்சுச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | II | நி.பி. 396 | 06 மாதங்கள் கடந்திருந்த போதும் கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 16,995 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | III | நி.பி.454 | களஞ்சியப் பொருட்கள் தொடர்பில் பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | IV | நி.பி.756 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2012 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | வாகனங்களின் உள்ளாந்த திருத்தங்கள் தொடர்பாக தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களின் பரிந்துரை பெறப்படாது 4 சந்தர்ப்பங்களின் போது திருத்த வேலைகள் தொடர்பாகக் ரூபா 270,545 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (இ) | | 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு முகவரகத்தின் கொள்வனவு வழிகாட்டி 7:11:1 | கேள்விகளின் மதிப்பீடு பூர்த்தியான பின்னர் உடனடியாக கொள்வனவுக் கைநூலில் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்விகளின் மதிப்பீட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு சகல உறுதிப்படுத்தல் ஆவணங்களுடன் அவ் அறிக்கை கொள்வனவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் |

ரூபா 1,911,280 தொகையான நிர்மாண வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1.1 நிதி விளைவுகள்

மீளாள்வாண்டிற்காக சபையின் நிதி விளைவுகள், ரூபா 8,902,093 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,140,962 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 761,131 தொகையான அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியது. இவ் அதிகரிப்பிற்கு நிர்வாகச் செலவினம் ரூபா 5,396,568 ஆல் மேற்குறித்த அதிகரிப்பு தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமாப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் நிதிக் கட்டமைப்பு 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய நிலைமையுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| வளங்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | வேறுபாட்டு சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| | 2011 | 2010 | |
| திரண்ட நிதியம் | 33,575,937 | 23,125,038 | 45 |
| மிகை/ (பற்றாக்குறை) | (17,043,055) | (6,684,091) | 155 |
| | 16,532,882 | 16,440,947 | |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 24,273,801 | 9,326,902 | 160 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 2,536,067 | 1,453,768 | 74 |
| | 43,342,750 | 27,221,617 | |
| பயன்பாடு | | | |
| நிலையான சொத்துக்கள் | 32,223,158 | 16,040,330 | 101 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 11,119,592 | 11,181,285 | 1 |
| | 43,342,750 | 27,221,615 | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

ஆராய்ச்சிச் செயற்திட்ட உடன்படிக்கையின் பொது நிபந்தனை 4(1) இன் பிரகாரம் செயற்திட்டம் ஒன்று பூர்த்தியாகி மூன்று மாதங்களிற்குள் அதன் இறுதி அறிக்கை நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2005 முதல் 2008 வரையான காலப்பகுதிக்குரிய 27 செயற்திட்டங்களின் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதவியணி நிர்வாகம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆன போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான பதவியணி 21 ஆனமையால் வெற்றிடப்பதவி 10 எண்ணிக்கையானமை அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்கீட்டு முறைமையும் நல்ல ஆளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆம் திகதிய பீ/எப்/பீஈ21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் 03 மாத காலதாமதத்தை அடுத்து 2012 மே 31 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டமும் கணக்காய்வு அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு முகவராண்மையின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4:2:1 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்தல்**

சபையினால் 2010 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை 2012 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மன்றத்தின் 13 பிரதான பணிகள் தொடர்பில் 2011 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட பணம் ரூபா 21,345,679 ஆன போதிலும் உள்ளபடியாக செலவிடப்பட்ட பணம் ரூபா 11,867,834 ஆகும்.

**5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) செயற்திட்ட நிர்வாகம்
(ஆ) வாகன நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள்